08-09-2024 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 15.12.2001

(ஏக்விரதா) ஒரு விரதம் உடையவராக ஆகி தூய்மையின் தாரணை மூலமாக (ரூஹானியத்) ஆத்மீகத்தில் இருந்து மனசாசேவை செய்யுங்கள்.

இன்றைக்கு ஆன்மீக தந்தை நாலாபுறங்களிலும் இருக்கும் ஆத்மீக குழந்தைகளின் (ருஹானியத்) ஆத்மீகத் தன்மையை பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு குழந்தை களிடமும் ஆத்மீகத் தன்மையின் ஜொலிப்பு (ஜலக்) எவ்வளவு இருக்கிறது. ஆத்மீகத் தன்மை கண்கள் மூலம் (பிரத்யட்சம்) வெளிப்படுகிறது. ஆத்மீகத் தன்மையின் சக்தி உடைய ஆத்மா எப்பொழுதும் கண்கள் மூலமாக மற்றவர்களுக்கும் ஆத்மீக சக்தியை கொடுப்பார். ஆத்மீக புன்முறுவல் மற்றவர்களுக்கும் குஷியின் உணர்வை அனுபவம் செய்விக்கிறது. அவரது நடத்தை, முகம் ஃபரிஷ்தாக்கள் போல (சூட்சும தேவதைகள்) (டபிள்லைட்) லேசாக ஒளியாக தென்பட்டு கொண்டிருக்கும். அப்பேர்ப்பட்ட ஆத்மீகத் தன்மையின் ஆதாரம் தூய்மை ஆகும். எந்த அளவிற்கு மனம், சொல், செயலில் தூய்மை இருக்குமோ, அந்த அளவிற்கே ஆத்மீகத் தன்மை தென்படும். தூய்மை பிராமண வாழ்க்கையின் அலங்காரம் ஆகும். தூய்மை பிராமண வாழ்க்கையின் நியமம் (மரியாதை) ஆகும். எனவே பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் தூய்மையின் ஆதாரத்தில் ஆத்மீகத் தன்மையை பார்த்துக் கொண்டிருக்கிறார். ஆத்மீகத் தன்மை உடைய ஆத்மா இந்த உலகத்தில் இருக்கையிலும், அலௌகீக ஃபரிஷ்தாவாக தென்படுவார்.

எனவே தன்னைத் தானே பாருங்கள் - செக் செய்யுங்கள் - எனது எண்ணம், வார்த்தைகளில் ஆத்மீத் தன்மை இருக்கிறதா? ஆத்மீகத் தன்மையுடன் கூடிய எண்ணம் தனக்குள் கூட சக்தி நிரப்பக் கூடியதாக இருக்கும். மேலும் மற்றவர்களுக்கும் சக்தி கொடுக்கும். இதையே மறு வார்த்தைகளில் ஆத்மீக தன்மையுடன் கூடிய (சங்கல்பங்கள்) எண்ணங்கள் மனசா சேவைக்கு (நிமித்தமாக) கருவியாக அமைகிறது என்று கூறுகிறீர்கள். ஆத்மீகத் தன்மையுடன் கூடிய வார்த்தைகள் சுயம் தனக்கும் மேலும் மற்றவர்களுக்கும் சுகத்தின் அனுபவம் செய்விக்கும். அமைதியின் அனுபவம் செய்விக்கும். ஒரு ஆத்மீகத் தன்மையுடன் கூடிய வார்த்தை மற்ற ஆத்மாக்களின் வாழ்க்கையில் முன்னேறுவதற்கான ஆதாரம் ஆகி விடுகிறது. ஆத்மீகத் தன்மையுடன் கூடிய வார்த்தைகள் பேசுபவர்கள் (வரதானம் அளிக்கக் கூடிய) வரதானி ஆத்மா ஆகி விடுகிறார். ஆத்மீகத் தன்மையுடன் கூடிய செயல்கள் சுயம் தனக்கும் கர்மயோகி நிலையின் அனுபவம் செய்விக்கிறது. மேலும் மற்றவர்களையும் கர்மயோகியாக ஆக்கக் கூடிய (ஸேம்பிள்) மாதிரியாக ஆகி விடுகிறார். யாரெல்லாம் அவருடைய தொடர்பில் வருகிறார்களோ, அவர்கள் சகஜயோகி கர்மயோகி வாழ்க்கையின் அனுபவம் உடையவர்களாக ஆகி விடுகிறார்கள். ஆனால் கூறினார் அல்லவா? ஆத்மீகத் தன்மையின் விதை தூய்மை ஆகும். தூய்மைக்கு கனவிலும் கூட பங்கம் ஏற்படக் கூடாது. அப்பொழுது தான் ஆத்மீகத் தன்மை தென்படும். தூய்மை என்பது வெறும் பிரம்மச்சாரியம் மட்டுமல்ல. ஆனால் ஒவ்வொரு வார்த்தையும் பிரம்மாச்சாரியாக

(பிரம்மாவின் வழிப்படி) இருக்க வேண்டும். ஒவ்வொரு (சங்கல்பம்) எண்ணம் கூட பிரம்மாச்சாரியாக இருக்க வேண்டும். ஒவ்வொரு செயலும் பிரம்மாச்சாரியாக இருக்க வேண்டும். எப்படி லௌகீகத்தில் ஒரு சில குழந்தை களின் தோற்றம் தந்தையைப் போலவே இருக்கும் பொழுது இந்த குழந்தையிடம் தந்தையே தென்படுகிறார் என்று கூறப்படுகிறது. அதே போல பிரம்மாச்சாரி பிராமண ஆத்மாவின் முகத்தில் ஆத்மீகத் தன்மையின் ஆதாரத்தில் பிரம்மா தந்தைக்கு சமானம் என்ற அனுபவம் ஆக வேண்டும். இவர் பாப்சமான் தந்தைக்கு சமானமாக இருக்கிறார் என்று தொடர்பில் வரக் கூடிய ஆத்மாக்கள் அனுபவம் செய்ய வேண்டும். சரி 100 சதவிகிதம் இல்லை என்றாலும் கூட காலத்திற்கேற்ப எவ்வளவு சதவிகிதம் தென்பட வேண்டும்? எது வரை வந்திருக்கிறீர்கள்? 75 சதவிகிதம்? 80 சதவிகிதம்? 90 சதவிகிதம்? எதுவரை வந்திருக்கிறீர்கள். முன்னால் வரிசை யில் அமர்ந்திருப்பவர்கள் கூறுங்கள். பாருங்கள் உட்காருவதிலோ உங்களுக்கு முன்னால் நம்பர் கிடைத்துள்ளது. எனவே பிரம்மாச்சாரி ஆவதில் கூட முன்னால் நம்பர் ஆக வேண்டும் அல்லவா? முன்னால் இருப்பீர்களா? இல்லையா?

பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் தூய்மையின் ஆதாரத்தில் ஆத்மீக தன்மையை பார்க்க விரும்புகிறார். பாப்தாதாவிடம் எல்லாருடைய சார்ட்-ம் இருக்கிறது. சொல்வதில்லை. ஆனால் சார்ட் இருக்கிறது. என்ன என்ன செய்கிறார்கள், எப்படி செய்கிறார்கள்? எல்லாமே பாப்தாதாவிடம் சார்ட் இருக்கிறது. தூய்மையில் கூட இப்பொழுது ஒரு சில குழந்தைகளின் சதவிகிதம் மிகவும் குறைவாக இருக்கிறது. காலத்திற்கேற்ப உலகத்தின் ஆத்மாக்கள், ஆத்மாக்களாகிய உங்களை ஆத்மீகத் தன்மையின் (ஸேம்பிள்) மாதிரியாக பார்க்க விரும்பு கிறார்கள். இதற்கான எளிய சாதனமாவது - ஒரேயொரு வார்த்தை (அட்டென்ஷன்) கவனத்தில் கொள்ளுங்கள். திரும்ப திரும்ப அந்த ஒரு வார்த்தையை தனக்குத் தானே (அண்டர்லைன்) அடி கோடிட்டு கொள்ளுங்கள். அந்த ஒரு வார்த்தையாவது - ஏக்வ்ரதா பவ - ஒருவரின் விரதத்தில் இருப்பவர் ஆவீர்களாக. எங்கு ஒன்று இருக்கிறதோ, அங்கு (ஏகாக்ரதா) ஒரு முக நிலை இயல்பாகவே வந்து விடுகிறது. ஆடாது அசையாதவராக இயல்பாகவே ஆகி விடுவீர்கள். ஏக்வ்ராத ஆகும் பொழுது (ஏக்மத்) ஒரு வழியில் நடப்பது மிகவும் சுலபமானதாக ஆகி விடுகிறது. இருப்பதே (ஏக்வ்ரதா) ஒருவரின் விரதத்தில் என்றால், ஒருவரின் வழி மூலமாக ஏக்மதி சத்கதி - ஒரு வழி உடையவருக்கு சத்கதி சுலபமாக ஆகி விடுகிறது. ஏக்ரஸ் ஸ்திதி - ஒரே ரசனையின் நிலை இயல்பாகவே அமைந்து விடுகிறது. எனவே செக் செய்யுங்கள் - (ஏக்வ்ரதா) ஒருவரின் விரதம் இருக்கிறதா? நாள் முழுவதிலும் மனம், புத்தி (ஏக்விரதா) ஒருவரின் விரதத்தில் இருக்கிறதா? கணக்கில் கூட ஆரம்ப கணக்கு ஒன்று என்ற எண்ணிலிருந்து தான் ஆரம்பமாகிறது. ஒரு புள்ளி மற்றும் ஒரு வார்த்தை, ஒரு எண் இட்டுக் கொண்டே செல்லுங்கள். ஒரு புள்ளி வைத்துக் கொண்டே செல்லுங்கள். பின் எவ்வளவு அதிகரித்துக் கொண்டே போகும். எனவே வேறு எதுவும் நினைவிற்கு வரக் கூடாது. ஒன்று என்ற வார்த்தையோ நினைவில் இருக்கும் அல்லவா? காலமும், ஆத்மாக்களும், ஒரு விரதம் உடைய ஆத்மாக்களாகிய (ஏக்விரதா) உங்களை அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே காலத்தின் அழைப்பு, ஆத்மாக்களின் கூக்குரல் - ஹே தேவ ஆத்மாக்களே, உங்களுக்கு கேட்கவில்லையா? இயற்கை கூட இயற்கையின் தலைவர்களாகிய உங்களை

பார்த்து பார்த்து முறையிட்டு கொண்டிருக்கிறது - ஹே பிரகிருதிபதி-இயற்கையின் தலைவர்களாகிய ஆத்மாக் களே இப்பொழுது பரிவர்த்தனை செய்யுங்கள். இதுவோ இடையிடையில் சிறு சிறு உதறல்கள் ஏற்பட்டு கொண்டிருக்கின்றன. ஆதரவற்ற ஆத்மாக்களுக்கு திரும்ப திரும்ப துக்கத்தின், பயத்தின் உதறல்கள் எடுக்குமாறு செய்யாதீர்கள். முக்தி அளிக்கக் கூடிய ஆத்மாக்களாகிய நீங்கள், மாஸ்டர் முக்தி தாதா (முக்தி அளிக்கும் வள்ளல்) எப்பொழுது இந்த ஆத்மாக்களுக்கு முக்தி அளிப்பீர்கள்? உங்களுக்கு மனதில் கருணை ஏற்படுவதில்லை? இல்லை சமாச்சாரம் கேட்டு விட்டு மௌனம் ஆகி விடுகிறீர்கள். அவ்வளவு தான் ஆகி விட்டது. கேட்டுக் கொண்டு விட்டோம். எனவே பாப்தாதா ஒவ்வொரு குழந்தையினுடைய மர்சிஃபுல்-கருணை நிறைந்த சொரூபத்தை இப்பொழுது பார்க்க விரும்புகிறார். தங்களுடைய எல்லைக்குட்பட்ட விஷயங்களை இப்பொழுது விட்டு விடுங்கள். மர்சிஃபுல் ஆகுங்கள். மனசா சேவையில் ஈடுபட்டு விடுங்கள். சகாஷ் (சக்தி) கொடுங்கள், அமைதி கொடுங்கள், ஆதரவு கொடுங்கள். மர்சிஃபுல் ஆகி மற்றவர்களுக்கு ஆதரவு கொடுப்பதில் பிஸி - மும்முரமாக ஆகி விட்டீர்கள் என்றால் எல்லைக்குட்பட்ட கவர்ச்சிகளிலிருந்து, எல்லைக்குட்பட்ட விஷயங்களிலிருந்து இயல்பாகவே விலகி சென்று விடுவீர்கள். உழைப்பிலிருந்து காப்பாற்றப்பட்டு விடுவீர்கள். வார்த்தைகளின் சேவையில் நிறைய நேரம் கொடுத்தீர்கள், உங்களது நேரத்தை பயனுள்ளதாக ஆக்கினீர்கள். செய்தி கொடுத்தீர்கள். ஆத்மாக்களை சம்பந்தம் தொடர்பில் எடுத்து வந்தீர்கள். நாடகப்படி இதுவரை என்ன செய்தீர்களோ, அது மிகவும் நன்றாகவே செய்தீர்கள். ஆனால் இப்பொழுது வார்த்தைகளுடன் கூடவே, மனசா சேவையின் அதிகமான அவசியம் உள்ளது. மேலும் இந்த மனசா சேவை ஒவ்வொருவரும், புதியவர், பழையவர், யானைப்படையினர், குதிரைப்படையினர், காலாட் படையினர் எல்லோருமே செய்ய முடியும். இதில் பெரியவர் செய்வார்கள். நாமோ சிறியவர்கள் ஆவோம். நாங்களோ நோய்வாய்ப்பட்டிருக்கிறோம், நாங்களோ சாதனமுடையவர்கள் இல்லை .. .. .. எந்தவொரு ஆதாரமும் வேண்டியதில்லை. இது சிறிய சிறிய குழந்தைகள் கூட செய்ய முடியும். குழந்தைகளே, மனதால் சேவை உங்களால் செய்ய முடியும் அல்லவா? (ஹாம் ஜி - ஆமாம்). எனவே இப்பொழுது சொல்லின் சேவை மற்றும் மனம் மூலம் செய்யும் சேவையின் (பேலன்ஸ்) சமநிலை கொள்ளுங்கள். மன சேவையினால் சேவை செய்யக் கூடியவர்களாகிய உங்களுக்கும் மிகவும் லாபம் இருக்கிறது. ஏன்? எந்த ஆத்மாவிற்கு மனசா சேவை அதாவது சங்கல்பத்தின் மூலம் சக்தி கொடுப்பீர்களோ, சகாஷ் கொடுப்பீர்களோ அந்த ஆத்மா உங்களுக்கு ஆசீர்வாதம் கொடுப்பார். மேலும் உங்களுடைய கணக்கில் சுயம் தங்களது (புருஷார்த்தம்) முயற்சியோ இருக்கவே இருக்கிறது. ஆனால் ஆசிகளின் கணக்கும் சேமிப்பு ஆகி விடும். எனவே உங்களுடைய சேமிப்பு கணக்கு (டபிள்) இரட்டிப்பு முறையில் அதிகரித்துக் கொண்டே போகும். எனவே புதியவர்களாக இருக்கட்டும், பழையவர்களாக இருக்கட்டும் - ஏனெனில் இந்தமுறை புதியவர்கள் நிறைய பேர் வந்துள்ளார்கள் அல்லவா? முதல் முறை வந்திருக்கும் புதியவர்கள் கை உயர்த்துங்கள். முதல் முறை வந்திருக்கும் குழந்தைகளிடம் கூட ஆத்மாக்களாகிய நீங்கள் மனசா சேவை செய்ய முடியுமா? என்று பாப்தாதா கேட்கிறார். (நீங்கள் மனசா சேவை செய்ய முடியுமா? என்று பாப்தாதா பாண்டவர்களிடம், தாய்மார்களிடம் எல்லாரிடமும் தனித் தனியாக வினவினார்) இதற்கு மிகவும் நன்றாக கை உயர்த்தினீர்கள் -

ஒரு சிலர் டி.வி. மூலமாக பார்த்துக் கொண்டும், கேட்டுக் கொண்டும் இருக்கிறார்கள். ஒரு சிலர் நேரிடை யாகவும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள், இப்பொழுது பாப்தாதா தினமும், நாள் முழுவதிலும் எவ்வளவு மணி நேரம் சரியான முறையில் மனசா சேவை செய்தீர்கள் என்று ஒவ்வொரு வரும் தங்களிடம் சார்ட் வையுங்கள் என்று எல்லா குழந்தைகளுக்கும் பொறுப்பு கொடுக் கிறார். ஆம் செய்து விட்டேன் என்று அப்படியே சொல்லாதீர்கள். உண்மையாண (யதார்த்த) ரூபத்தில் எவ்வளவு மணி நேரம் மனசா சேவை செய்தீர்கள் என்று ஒவ்வொருவரும் சார்ட் வையுங்கள். பிறகு பாப்தாதா திடீரென்று சார்ட் கொண்டு வர சொல்லுவார். தேதி கூற மாட்டார். திடீரென்று சார்ட் கொண்டு வருமாறு கூறுவார். பொறுப்பின் கிரீடம் அணிந்திருக் கிறீர்களா? இல்லை ஆடிக் கொண்டே இருக்கிறதா? என்று பார்ப்பார். பொறுப்பின் கிரீடம் அணிய வேண்டும் அல்லவா? டீச்சர்களோ பொறுப்பின் கிரீடம் அணிந்திருக்கிறீர்கள் அல்லவா? அதில் இப்பொழுது இதை சேர்த்துக் கொள்ளுங்கள். சரி தானே? (டபிள் ஃபாரினர்ஸ்) இரட்டை வெளி நாட்டினர் கை உயர்த்துங்கள். இந்த பொறுப்பின் கிரீடம் நல்லதாக தோன்று கிறது அல்லவா? எனவே இவ்வாறு கை உயர்த்துங்கள். டீச்சர்கள் கூட கை உயர்த்துங்கள். உங்களை பார்த்து எல்லாருக்கும் (பிரேரணை) தூண்டுதல் கிடைக்கும். எனவே சார்ட் வைப்பீர்களா? நல்லது. பாப்தாதா திடீரென்று ஒரு நாள் கேட்பார் - அவரவர் சார்ட் எழுதி அனுப்புங்கள், பிறகு பார்ப்பார் - ஏனெனில் நிகழ்காலத்தில் மிகவும் அவசியமாக உள்ளது. உங்களுடைய (பரிவாரத்தின்) குடும்பத்தின் துக்கம், குழப்பங்களை உங்களால் பார்க்க முடிகிறதா? துக்கமுடைய ஆத்மாக்களுக்கு உயிர்ப் பிச்சையாவது கொடுங்கள். நாங்கள் ஒரு துளிக்கான தாகம் கொண்டுள்ளோம் என்று உங்களுடைய ஒரு பாட்டு இருக்கிறது அல்லவா? இன்றைய சமயத்தில் ஆத்மாக்கள் சுகம், சாந்தியின் ஒரு துளிக்காக தாகம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். சுகம் சாந்தியின் ஒரு அமிருத துளி கிடைத்து விட்டால் கூட குஷி அடைந்து விடுவார்கள். பாப்தாதா திரும்ப திரும்ப சொல்லிக் கொண்டே இருக்கிறார் - காலம் உங்களை எதிர்பார்த்து கொண்டிருக்கிறது. பிரம்மா தந்தை தனது வீட்டினுடைய (கேட்) கதவை திறப் பதற்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். இயற்கை தீவிர வேகத்துடன் சுத்தப் படுத்துவதற் காக எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது. எனவே ஹே பரிஷ்தாக்களே, இப்பொழுது தங்களது டபிள்லைட் (இரட்டை ஒளி) மூலமாக எதிர் பார்ப்பை முடித்து விடுங்கள். எவர்ரெடி என்ற வார்த்தையையோ எல்லாரும் சொல்கிறீர்கள். ஆனால் சம்பன்னம் மற்றும் சம்பூர்ணம் ஆவதில் எவர்ரெடி ஆகி உள்ளீர்களா? சரீரம் விடுவதற்காக மட்டும் எவர்ரெடி ஆவதல்ல. ஆனால் பாப்சமான் - தந்தைக்கு சமானமாக ஆவதில் எவர்ரெடி ஆக வேண்டும்.

இந்த மதுபன்னிலிருப்பவர்கள் எல்லாரும் முன்னால் உட்காருகிறார்கள். நல்லது. சேவையும் செய்கிறார்கள். மதுபனில் இருப்பவர்கள் எவர்ரெடி ஆவீர்களா? சிரிக்கிறார்கள். நல்லது. முதல் வரிசையில் அமர்ந்திருக்கும் மகாரதிகள் எவர்ரெடி ஆவீர்களா? தந்தைக்கு சமானமாக ஆவதில் எவர்ரெடி? அப்படியே போவது என்றால் அட்வான்ஸ் பார்ட்டியில் செல்வீர்கள். அட்வான்ஸ் பார்ட்டியோ விரும்பாவிட்டாலும் அதிகரித்துக் கொண்டே போய்க் கொண்டிருக்கிறது. இப்பொழுது சொல் மற்றும் மனசா சேவையின் பேலன்ஸ்-சமநிலையில் பிஸி (மும்முரமாக) ஆகி விட்டீர்கள் என்றால், பிளெஸ்ஸிங்- ஆசிகள் நிறைய கிடைக்கும். டபிள் கணக்கு (இரட்டை கணக்கு)

சேமிப்பு ஆகி விடும். (புருஷார்த்தம்) முயற்சியினுடையதும் மற்றும் ஆசிகளினுடையதும். எனவே சங்கல்பம் மூலமாக, வார்த்தைகள் மூலமாக, பேச்சு மூலமாக, கர்மம் மூலமாக, சம்பந்தம் தொடர்புகள் மூலமாக ஆசிகள் கொடுங்கள் மற்றும் ஆசிகள் பெறுங்கள். ஒரேயொரு விஷயம் செய்யுங்கள். அவ்வளவே. ஆசிகள் கொடுக்க வேண்டும். யாராவது சாபம் கொடுத்தாலும் சரி, அப்பொழுதும் நீங்கள் ஆசிகள் கொடுங்கள். ஏனெனில் நீங்கள் ஆசிகளின் கடலின் குழந்தைகள் ஆவீர்கள். யாராவது அதிருப்தி அடைந்தாலும், நீங்கள் அதிருப்தியாக கூடாது. நீங்கள் திருப்தியாக இருங்கள், அப்படி ஆக முடியுமா? 100 பேர் உங்களை அதிருப்தி படுத்தட்டும் ஆனாலும் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். அப்படி முடியுமா? முடியுமா? இரண்டாவது வரிசை யிலிருப்பவர்கள் கூறுங்கள், முடியுமா? இப்பொழுது இன்னுமே கோபமூட்டுவார்கள். பார்த்துக் கொள்ளுங்கள், பரிட்சை வரும் தானே? மாயை கூட கேட்டுக் கொண்டிருக்கிறது அல்லவா? அவ்வளவு தான். இந்த விரதம் எடுங்கள். திட சங்கல்பம் செய்யுங்கள் - நான் ஆசிகள் கொடுக்க வேண்டும் மற்றும் பெற வேண்டும். அவ்வளவு தான். முடியுமா? மாயை அதிருப்திப் படுத்தட்டுமே அல்லவா? நீங்களோ திருப்திப் படுத்தக் கூடியவர்கள் ஆவீர்கள் அல்லவா? எனவே ஒரேயொரு வேலை செய்யுங்கள், அவ்வளவே. அதிருப்தி அடையக் கூடாது. அதிருப்தி படுத்தவும் கூடாது. செய்கிறார்கள் என்றால் அவர்கள் செய்யட்டும். நாம் ஆகக் கூடாது. நாம் அதிருப்திப்படுத்தவும் கூடாது. அடையவும் கூடாது. ஒவ்வொருவரும் அவரவர் பொறுப்பு எடுத்துக் கொள்ளுங்கள். மற்றவர்களை பார்க்காதீர்கள். இவள் செய்கிறாள். இவர் செய்கிறார். நாம் (சாட்சி) பார்வை யாளராக ஆகி விளையாட்டை பார்ப்பவர்கள் ஆவோம், திருப்தியினுடைய விளையாட்டை மட்டுமே பார்ப்போமா என்ன? இடையிடையே அதிருப்தி தன்மையினுடையதும் பார்க்க வேண்டும் அல்லவா? ஆனால் ஒவ்வொருவரும் தங்களை தாங்களே திருப்தியாக வைத்துக் கொள்ளுங்கள்.

தாய்மார்கள், பாண்டவர்கள் முடியுமா? பாப்தாதா வரைபடத்தை பார்த்து விடுவார். பாப்தாதாவிடம் மிக பெரிய டீ.வி. இருக்கிறது. மிகவுமே பெரியது. ஒவ்வொரு வரினுடையதையும் பார்க்க முடியும். எந்த நேரத்தில் யார் என்ன செய்து கொண்டிருக்கிறார்? என்பதை பாப்தாதா பார்க்கிறார். ஆனால் சொல்வது இல்லை. உங்களுக்கு கூறுவதில்லை மற்றபடி நிறங்கள் நிறையவே பார்க்கிறார். ஒளிந்து ஒளிந்து என்ன செய்கிறீர்கள். அதையும் பார்க்கிறார். குழந்தை களுடைய தந்திரசாலித்தனமும் நிறைய இருக்கிறது அல்லவா? தந்திரம் நிறைய இருக்கிறது. பாப்தாதா குழந்தைகளுடைய தந்திரசாலிதனங்களை சொன்னார் என்றால் நீங்கள் கொஞ்சம் யோசிக்க முற்பட்டு விடுவீர்கள். அதனால் சொல்வதில்லை. உங்களை எதற்கு சிந்தனையிலாழ்த்த வேண்டும். ஆனால் மிகவும் புத்திசாலித்தனமாக செய்கிறார்கள். எல்லாரையும் விட புத்திசாலிகளை பார்க்க வேண்டும் என்றாலும் கூட பிராமணர்களை பாருங்கள். ஆனால் இப்பொழுது எதில் புத்திசாலி ஆகப் போகிறீர்கள். மனசா சேவையில். முன்னால் நம்பர் எடுத்துக் கொண்டு விடுங்கள். பின்னால் இருந்து விடாதீர்கள். இதில் எந்த காரணமும் இருக்க முடியாது. நேரம் கிடைப்பதில்லை, சான்ஸ் கிடைப்பதில்லை, உடல் நலம் சரியில்லை, யாருமே என்னை கேட்கவில்லை - இதெல்லாம் எதுவும் கிடையாது. எல்லாருமே செய்ய முடியும். குழந்தைகள் ஓட்டப் பந்தயத்தின்

விளையாட்டு விளையாடினீர் கள் அல்லவா? இப்பொழுது இதில் ஓட்டப் பந்தயம் மேற்கொள்ளுங்கள். மனசா சேவையில் ஓட்டப் பந்தயம் மேற் கொள்ளுங்கள். நல்லது.

கர்நாடகாவின் டர்ன் ஆகும் - சேவையில் வந்திருக்கும் கர்நாடகத்தினர் எழுந்திருங்கள். இத்தனை பேர் எல்லாரும் சேவைக்காக வந்துள்ளார்கள். நல்லது. இது கூட சுலபமாக சிறந்த புண்ணியத்தை சேமிப்பு செய்வதற்கான (கோல்டன் சான்ஸ்) பொன்னான வாய்ப்பு கிடைக் கிறது - பக்தியில் கூறப்படுகிறது - ஒரு பிராமணருக்கு கூட சேவை செய்தீர்கள் என்றால், பெரிய புண்ணியம் ஆகிறது. மேலும் இங்கு எத்தனை உண்மையான பிராமணர்களுக்கு சேவை செய்கிறீர்கள். எனவே இது நல்ல (சான்ஸ்) வாய்ப்பு கிடைக்கிறது அல்லவா? நன்றாக இருந்ததா? இல்லை களைப்பு ஏற்பட்டதா? ஒன்றும் களைத்து விட வில்லையே? ஆனந்தம் ஏற்பட்டது அல்லவா? உண்மையான உள்ளத்துடன் புண்ணியம் என்று நினைத்து சேவை செய்கிறார்கள் என்றால், அதற்கான (பிரத்யட்ச) கண்கூடான பலனாவது அவருக்கு களைப்பு ஏற்படாது. குஷி ஏற்படும். இந்த பிரத்யட்ச பலன் புண்ணியத்தின் சேமிப்பினுடையது அனுபவம் ஆகும். சிறிதளவு கூட ஏதாவதொரு காரணத்தினால் களைப்பு ஏற்படுகிறது அல்லது கொஞ்சம் அப்படியொரு உணர்வு ஏற்படுகிறது என்றால், உண்மையான உள்ளத்துடன் செய்யும் சேவை இல்லை என்பதை புரிந்து கொள்ளுங்கள் (சேவா) சேவை என்றால் பிரத்யட்ச பலன் மேவா- பழம். சேவை செய்வதில்லை - பழம் சாப்பிடுகிறீர்கள். எனவே கர்நாடகத்தின் எல்லா சேவாதாரிகளும் தங்களது நல்ல சேவையின் பாகத்தை நடித்தீர்கள் மற்றும் சேவையின் (பலனை) பழத்தை சாப்பிட்டீர்கள்.

நல்லது, எல்லா டீச்சர்களும் நன்றாக இருக்கிறீர்களா? டீச்சர்களுக்கோ எத்தனை முறை சீசனில் டர்ன் கிடைக்கிறது. இந்த டர்ன் கிடைப்பது கூட பாக்கியத்தின் அடையாளம் ஆகும். இப்பொழுது டீச்சர்கள் மனசா சேவையில் முன்னேறி செல்ல வேண்டும். ஆனால் அதற்காக நான் மனசா சேவை செய்து கொண்டிருக்கிறேன் என்று நாள் முழுவதும் உட்கார்ந்து விடாதீர்கள். யாராவது கோர்ஸ்-பாடமுறையை கேட்க வந்திருக்கிறார் மற்றும் நீங்கள் இல்லை, இல்லை நான் மனசா சேவை செய்து கொண்டிருக்கிறேன் என்று கூறுவதல்ல. எப்பொழுதாவது கர்மயோகத்தின் நேரம் வரும் பொழுது, நான் மனசா சேவை செய்து கொண்டிருக்கிறேன் என்று கூறுவதல்ல. இல்லை. பேலன்ஸ்-சமநிலை வேண்டும். ஒரு சிலருக்கு அதிகமான போதை ஏறி விடுகிறது அல்லவா? ஆக அந்த மாதிரி போதை ஏற்றிக் கொள்ளாதீர்கள். பேலன்ஸ் (சமநிலை) மூலமாக பிளெஸ்ஸிங் - ஆசிகள் இருக்கும். பேலன்ஸ் இல்லை என்றால், பிளெஸ்ஸிங் இல்லை. இப்பொழுது அனைவரும் ஒரு நொடியில் மனசாசேவையின் அனுபவம் செய்யுங்கள். ஆத்மாக்களுக்கு அமைதி மற்றும் சக்தியின் உயிர்ப்பிச்சை கொடுங்கள். நல்லது. நாலா புறங்களின் சர்வ சிரேஷ்ட ஆத்மீகத் தன்மையின் அனுபவம் செய்விக்கும் ஆத்மீக ஆத்மாக்களுக்கு, அனைத்து சங்கல்பம் மற்றும் கனவிலும் கூட தூய்மையின் பாடத்தை படிக்கும் பிரம்மாச்சாரி குழந்தைகளுக்கு அனைத்து திட சங்கல்பத்தை தரித்திருக்கும் மனசா சேவாதாரி, தீவிர (புருஷார்த்தி) முயற்சியாளர்களான ஆத்மாக்களுக்கு சதா ஆசிகள் கொடுக்கும் மற்றும் பெறக் கூடிய புண்ணிய ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின், இதய ராமனான தந்தையின் இதயபூர்வமான உயிருக்குயிரான

அன்பு நிறைந்த அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

தாதிஜி, தாதி ஜானகி ஜி அவர்களுடன் தனிப்பட்ட (பர்சனல்) சந்திப்பு.

பாப்தாதா திரிமூர்த்தி பிரம்மாவின் காட்சி காண்பித்தார். நீங்கள் எல்லாரும் பார்த்தீர்களா? ஏனெனில் தந்தைக்கு சமானமாக, தந்தையின் ஒரு செயலிலும் துணையாளர் ஆவீர்கள் அல்லவா? எனவே இந்த காட்சியை காண்பித்தார். பாப்தாதா உங்கள் இருவருக்கும் விசேஷ பவர்ஸ்-சக்திகளை வில் வழங்கி உள்ளார். வில் பவர்-மனோ பலத்தையும் கொடுத்துள்ளார். மேலும் அனைத்து பவர்ஸ் சக்திகளை வில் வழங்கவும் செய்திருக்கிறார். எனவே அந்த பவர்ஸ்-சக்திகள் தனது வேலையை செய்துக் கொண்டிருக்கிறது. செய்விப்பவர் செய்வித்துக் கொண்டிருக்கிறார். இப்பொழுது நீங்கள் கருவியாகி (நிமித்தம்) செய்து கொண்டிருக்கிறீர்கள். மஜா-ஆனந்தம் ஏற்படுகிறது அல்லவா? செய்பவரும் செய்விப்பவருமான தந்தை செய்வித்துக் கொண்டிருக்கிறார். எனவே செய்விப்பவர் செய்வித்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் கவலை யற்றவராக ஆகி செய்து கொண்டிருக்கிறீர்கள். கவலை இருப்பதில்லை அல்லவா? கவலை யில்லாத சக்கரவர்த்தி. நல்லது. ஆரோக்கியம் பற்றியும், நாலேஜ்ஃபுல் கொஞ்சம் கொஞ்சம் குறும்பு காட்டுகிறது. இதில் கூட நாலேஜ்ஃபுல் ஆகவே வேண்டி உள்ளது. ஏனெனில் சேவை நிறைய செய்ய வேண்டி உள்ளது அல்லவா? ஆக ஆரோக்கியம் கூட துணை புரிகிறது. எனவே டபிள் நாலேஜ்ஃபுல். நல்லது. ஓம் சாந்தி.

வரதானம் : ஈசுவரிய சகவாசத்தில் இருந்து தவறான சகவாசத்தின் தாக்குதலிலிருந்து தப்பித்து இருக்கும் எப்பொழுதும் சத்சங்கத்தில் இருப்பவர் ஆவீர்களாக.

எப்பேர்ப்பட்ட மோசமான சகவாசமாக இருந்தாலும் சரி, ஆனால் உங்களுடைய சிறந்த சகவாசம் அதற்கு முன்னால் பல மடங்கு சக்திசாலி ஆகும். ஈசுவரிய சகவாசத்திற்கு முன்னால் அந்த சகவாசம் ஒன்றுமே இல்லை. எல்லாமே பலவீனமானது ஆகும். ஆனால் சுயம் பலவீனமானவராக ஆகி விடும் பொழுது, தவறான சகவாசத்தின் தாக்குதல் ஏற்படுகிறது. யார் எப்பொழுதும் ஒரு தந்தையின் சகவாசத்தில் இருக்கிறார்களோ, அதாவது எப்பொழுதும் சத்சங்கம் உடையவர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் வேறு எந்தவொரு சங் கே ரங் – சகவாசத்தினுடைய சாயத்தில் தாக்கமுடையவர்களாக ஆகி விட மாட்டார்கள். வீணான விஷயங்கள், வீணான சகவாசம் அதாவது தீய சகவாசம் அவர்களை கவர்ச்சியில் வருமாறு செய்ய முடியாது.

சுலோகன்: தீமையை கூட நன்மையாக மாற்றுபவர்களே, மகிழ்ச்சியுள்ளம் உடையவர்களாக இருக்க முடியும்.